கட்டணம் செலுத்த வேண்டிய முகவரி :

https://erp.loyolacollege.edu/loyolaonline/conference/loginManager/youLogin.jsp

https://erp.loyolacollege.edu/loyolaonline/conference

கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு அல்லது QR code வழியாக உள்நுழையவும்.

NEW REGISTRATION என்ற இடத்தில் Sign Up செய்து உங்கள் விவரங்களைப் பதிவு செய்யவும்.

ALREADY REGISTRED என்ற இடத்தில் Sign in செய்யவும்.

CONFERENCE / WORKSHOP / REGISTRATION என்ற பகுதியில் **Kanndasan** என்ற தலைப்பைத் தேர்வு செய்யவும்.

உரிய விவரங்களைப் பூர்த்தி செய்தபின் கட்டணம் செலுத்தவும்

கட்டுரைகளில் மாற்றங்களைச் செய்யும் உரிமை கருத்தரங்கக் குழுவிற்கு உண்டு. ஆய்வுக் கட்டுரைகள் ISBN எண்ணுடன் நூலாக வெளியிடப்படும்.

தங்கும் இடவசதியும் பயணப்படியும் வழங்க இயலாது.

கட்டுரையை மின்னஞ்சலில் அனுப்புவதற்கும், கட்டணம் செலுத்துவதற்கும் உரிய இறுதிநாள் : 10-11-2026

மேலும் விவரங்களுக்கு :

முனைவர் **த. டான் ஸ்டோனி**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி,
சென்னை - 600 034 | செல்பேசி : 99449 11404

செயல்படுவோம், நலனே நடக்கும் என்று
பொது நம்பிக்கையிருந்தால்
வாழ்க்கை நிச்சயம் வளமடையும்.
– கவியரசர்

கருத்தரங்கப் புரவலர்கள்

அருள்முனைவர் **அந்தோனி ராபின்சன்,**சே.ச.
அதிபர், இலயோலா கல்லூரி

அருள்முனைவர் **து. தாமஸ் அலெக்ஸாண்டர்,**சே.ச.
செயலர் & தாளாளர், இலயோலா கல்லூரி

அருள்முனைவர் **அ. லூயிஸ் ஆரோக்கியராஜ்,**சே.ச.
முதல்வர், இலயோலா கல்லூரி

கருத்தரங்கத் தலைவர்

முனைவர் **டோ. டேவிட் ஸ்டான்லி**
இணைப் பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
இலயோலா கல்லூரி, சென்னை-600 034.
செல்பேசி : 98405 53558

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் **த. டான் ஸ்டோனி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
இலயோலா கல்லூரி, சென்னை - 600 034.
செல்பேசி : 99449 11404

முனைவர் **ரேவதி ராபர்ட்**
ஒருங்கிணைப்பாளர், தமிழ்த்துறை (சுழற்சி-2),
இலயோலா கல்லூரி, சென்னை - 600 034.
செல்பேசி : 98400 14802

கருத்தரங்க அமைப்பாளர்கள்

முனைவர் ஜா. அமிர்தலெனின்
பேரா. ஞா. ஞான யுவராசு
அருள்தந்தை வி. சகாயராஜ்,சே.ச.
முனைவர் எல். சூசை சகாயராஜா
முனைவர் ம. ஜெயபிரகாஸ் ரத்தின தியாகு
முனைவர் சு.அ. அன்னையப்பன்
முனைவர் வீ. ஜயப்பன்
பேரா. இர. அனுஷா
பேரா. இ. மைக்கேல் ராஜ்
பேரா. ஜெ. சந்தியாகப்பர்
முனைவர் ச. பால்ராஜ்
முனைவர் இர. பிரபா
முனைவர் ஆ. பிரின்ஸ் சார்லஸ்
முனைவர் வீ. பாரதிராஜா
பேரா. அ. சகாய ஜெசிகலா
பேரா. லூ. கிளிண்டன் லீசன்

இலயோலா கல்லூரி
(தன்னாட்சி)
சென்னை-600 034

தமிழ்த்துறை

நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்
(International Seminar)

26, 27 நவம்பர் 2026

அறிவிப்பும்
அழைப்பும்



கவியரசு கண்ணதாசன்
ஒரு காலப்பெட்டகம்

கண்ணதாசன் நூற்றாண்டு சிறப்புக் கருத்தரங்கம்

Poet laurate Kannadasan -
A Treasure Trove of an Era

மாண்புடையீர்,

வணக்கம்!

'ஒருவன் உலகமெலாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் தன் ஆன்மாவை இழந்தால் என்ன பயன்' என்ற இறை வாக்கைத் தனதாக்கி, எல்லாம் இறைவனின் அதிமிக மகிமைக்கே என்ற இறைச்சிந்தனையோடு, இன்னும் அதிகமாக என்று வரலாறு படைத்தவர் புனித இலயோலா இஞ்ஞாசியார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட இயேசு சபை என்ற கல்வி நிறுவனங்களால் செம்மாந்து எழுந்து நின்று கல்விப் பணியாற்றி வருகின்றது. உலகம் முழுவதும் தனது விழுதுகளால் சிறந்து விளங்குகின்றது. கல்விப் பணியால் மனிதம் மலரச் செய்கின்றது. எண்ணற்ற சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது. இத்தகைய சிறப்புத்தன்மையுற்ற அருள்தந்தையர்களால் நிர்வகிக்கப்படும் பெருமைமிக்க இலயோலா கல்லூரியின் தமிழ்த்துறையானது கவியரசர் கண்ணதாசன் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் பொருட்டு 2026-2027 ஆம் கல்வியாண்டில் கவியரசு கண்ணதாசன் ஒரு காலப்பெட்டகம் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்றினை நடத்தவுள்ளது.

தமிழ்த்துறை

இலயோலா கல்லூரியின் தமிழ்த்துறையானது 1969 ஆம் ஆண்டு முதல் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. இலக்கிய மாணவர்களுக்கென்று தத்துவ போதகர் தமிழ் இலக்கிய மன்றம், பொதுத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கென்று இனிகோ தமிழ்ப்பேரவை, வீரமாமுனிவர் தமிழ்ப்பேரவை ஆகிய அமைப்புகள் தமிழ்த்துறையில் செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு தொடர்ந்து வரும் தமிழ்த்துறையின் செயல்பாடுகளில் இந்தக் கல்வியாண்டில் இக்கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கின் பொருண்மையின் அடிப்படையில் இருந்து சான்றோர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், பேராசிரியப் பெருமக்கள், ஆர்வலர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோரிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகளை வரவேற்கிறோம்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமா?
எந்த விமர்சனத்தையும் தாங்கிக்கொள்ளும் உள்ளம் வேண்டும்.
– கவியரசர்

கருத்தரங்க நோக்கம் :

தமிழ் இலக்கிய மரபானது பாரம்பரியமிக்கது. அது சங்க காலம் முதல் சமகாலம் வரை தனித்த வரலாற்றுப் பின்னணியும் அடையாளமும் உள்ளது. இத்தகைய நீண்ட நெடிய இலக்கிய மரபைக்கொண்ட தமிழ் இலக்கியத்தில் எண்ணற்ற படைப்பாளிகள் தோன்றி அவ்வப்போது தமிழன்னைக்கு அழகு சேர்த்துள்ளனர். அந்த வரிசையில் கவியரசர் கண்ணதாசனும் ஆகச்சிறந்த ஆளுமைகளுள் ஒருவர். அவரது நூற்றாண்டைச் சிறப்பிக்கும் பொருட்டு அவரது திரையிசைப்பாடல்கள் மற்றும் எழுத்துகளில் வெளிப்படுகின்ற சமூகச் சிந்தனைகள், பெண்ணியக் கருத்தியல்கள், சமூகநீதிச் சிந்தனைகள், பொதுவுடைமைச் சிந்தனைகள், தமிழ், தமிழர் நலன், இலக்கிய நயம் போன்றவற்றை ஆய்வு செய்து, ஆய்வுக் கட்டுரைகளை நூலாகத் தொகுத்து ஆவணமாக வெளியிடுவதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

ஆய்வுக் களங்கள்

இக்கருத்தரங்கில் பங்குபெற விரும்புவோர் பின்வரும் ஆய்வுக்களங்களின் அடிப்படையில் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கலாம். **ஆய்வுக் கட்டுரைகள் கவியரசு கண்ணதாசனின் படைப்புகள் குறித்தும் அவரது திரைப்படப் பணிகள் மற்றும் இலக்கியப் பணிகள் சார்ந்தும் அமையலாம்.**

இலக்கியப் பணியும் கண்ணதாசனின் வாழ்வும்
கண்ணதாசனின் படைப்புகளில் செவ்வியல் தாக்கம்
கண்ணதாசனின் படைப்புகளில் சமுதாயச் சிந்தனை
கண்ணதாசனின் படைப்புகளில் தமிழினி தத்துவமரபு
கண்ணதாசனின் படைப்புகளில் பெண்ணியம்
கண்ணதாசனின் படைப்புகளில் மானுடநலன்
கண்ணதாசனின் படைப்புகளின் நோக்கும் போக்கும்
கண்ணதாசனும் பாரதியும்
கண்ணதாசனும் பாரதிதாசனும்
கண்ணதாசனும் கம்பரும்
கண்ணதாசனும் இளங்கோவடிகளும்
கண்ணதாசன் ஒரு காப்பியக் கவிஞர்
கண்ணதாசனின் படைப்புகளில் சித்தர் இலக்கியம்
கண்ணதாசனின் படைப்புகளில் பக்தி இலக்கிய மரபு
கண்ணதாசனின் படைப்புகளில் நாட்டுப்புற இலக்கியத் தாக்கம்
கண்ணதாசனின் படைப்புகளில் சமூகமும் சமகாலச் சவால்களும்
கண்ணதாசனின் படைப்புகளில் அழகியல் கோட்பாடு
கண்ணதாசனின் படைப்புகளில் தேசியச் சிந்தனை

மேற்கண்ட பல்வேறு பொருண்மைகளில் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

கட்டுரையாளர் கவனத்திற்கு

- சான்றோர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், பேராசிரியப் பெருமக்கள், ஆர்வலர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வுக் கட்டுரையை அனுப்பலாம்.
- ஆய்வு மாணவர்கள் தங்கள் நெறியாளர் பரிந்துரையுடன் கட்டுரையை அனுப்புதல் வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரைகள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருக்கலாம்.
- ஆய்வுக் கட்டுரை A4 தாளில் யுனிக்கோடு எழுத்துருவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி tamilseminar@loyolacollege.edu என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துருவோடு (Font) சேர்த்து அனுப்ப வேண்டும்.
- பேராளர் கட்டணம் : ஆய்வாளர் ரூ.300/-
  பேராசிரியர் ரூ.600/-
- கட்டுரையாளர்கள் இருவராகஇருப்பின் தனித்தனியாகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

தன்னையறிந்தால்
உண்மையில் இன்பம்
தன்னலம் மறந்தால்
பெரும் பேரின்பம்
– கவியரசர்